மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கொளஞ்சியப்பர் கோயிலைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற நிர்வாக அதிகாரி சில குறைபாடுகளோடு இருக்கிறார் என்பது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நிர்வாக அதிகாரியை மாற்றி, அந்தப் பணிகள், திருப்பணிகள் வேகப்படுத்தப்படும். அதேபோல் விருத்தகிரீஸ்வரர் கோயிலுக்கும் திட்டங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். எனவே ஒரு அங்காடியை பலமாடிக் கட்டிடத்தைக்கட்டி அதன்மூலம் அந்தக் கோயிலின் வருமானத்தைப் பெருக்க இருக்கிறோம். திருப்பணிக் குழு போடப்பட இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு கோயில்களுடைய வளர்ச்சியை மனதிலே கொண்டு, காரியங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

9-35 மணி

அங்காடிகள் அமைத்தல்

*** 2232 திரு. சோ. பால்ராஜ் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாநகருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நகரின் மையப் பகுதியில் சிறு வியாபாரிகளுக்கான நிரந்தர அங்காடிகள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத்தலைவர் அவர்களே,

மதுரை நகரின் மையப் பகுதியிலே இருக்கிற கூடலழகர் கோவிலுக்குச் சொந்தமான திருக்குளத்தில் டெல்லியிலே இருப்பதைப் போல ஒரு ஏர்கண்டிசன் அங்காடி அமைப்பதற்கு அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் திட்டமிடப்பட்டது. அந்தக் கோவிலைச் சேர்ந்த வைணவர்கள், வைணவ ஆன்மீக நேயர்கள் ஒரு சங்கத்தின் மூலமாக நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கிவிட்டதன் காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. சோ. பால்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரின் முக்கியப் பகுதியாக உள்ள டவுன் ஹால் ரோடில் உள்ள பெருமாள் கோவிலில் உள்ள குளத்தில் இப்போது தண்ணீரும் கிடையாது. விழாவும் நடைபெறுவதில்லை. ஆகவே தடை வாங்கப்பட்டதை நீக்கி, அந்த அங்காடிகள் கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: துணைத்தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திருக்குளத்தை முழுவதுமாக மூடுவதற்கு ஆன்மீக நேயர்கள் மத்தியிலும், பக்தர்கள் மத்தியிலும், குறிப்பாக மடாதிபதிகள் மடங்களைச் சேர்ந்த பீடாதிபதிகள் இப்படிப்பட்ட குளத்தை தூர்க்கக் கூடாது என்று அறிக்கை விடுகிறார்கள். ஆகவே அதற்கு மாற்று ஏற்பாடாக நான் பலரிடத்திலே இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். அங்கே குளத்தின் மையப் பகுதியிலே உள்ள மண்டபத்தை அப்படியே வைத்துக்கொண்டு, மண்டபத்தைச் சுற்றி ஓரளவிற்கு தண்ணீர் தங்கக்கூடிய அளவிற்கு குளமும் வைத்து, அந்தக் குளத்தைச் சுற்றி ஒரு நந்தவனமும் ஏற்பாடு செய்து, நந்தவனத்தைச் சுற்றி, சாலைக்கு அருகிலே அங்காடியைக் கட்டினால், இது ஒரு மல்டி-பர்பஸ் ஸ்கீம் என்ற அளவிலே இதை மக்கள், பக்தர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். பீடாதிபதிகள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான எழுகடல் பகுதியில் தேவஸ்தானத்தினுடைய அனுமதியோடு கடைகள் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதைப்போல அந்தப் பகுதியிலும், அதே பிரமுகர்கள்தான் மீனாட்சி அம்மன் கோவிலைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய அனுமதியைப் பெற்று, உடனடியாக மதுரை நகரின் இதயம் போன்று இருக்கிற இந்த டவுன் ஹால் ரோடில் அங்காடிகள் கட்டினால் வருமானம் வரும். ஏழை மக்களுக்கு சிறிய கடைகள் கட்டிக் கொடுத்தால், அவர்களுடைய வியாபாரத்தின் மூலமாக அவர்களுடைய பிழைப்பும் நடைபெறும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, எழுகடல் பகுதியில் இந்த அங்காடிகள் கட்டப்படுவது முடிகின்ற தருவாயிலே இருக்கிறது. மீனாட்சி அம்மன் கோவிலுக்கு இதன் மூலமாக வருவாய் பெருகும் என்று கருதுகிறோம். அதைப்போல கூடலழகர் கோவிலைச் சேர்ந்த இந்த திருக்குளத்திலே அங்கேயிருக்கிற ஆன்மீக நேயர்களுடைய அனுமதியைப் பெற்று, இதுபோன்ற அங்காடிகள் கட்டப்படுகின்ற செயற்குறிப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தினுடைய மையப் பகுதி என்பது மஹால் பகுதியாகும். அந்த

மஹால் பகுதியில் தற்காலிகக் கடைகள்தான் இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாத அளவிற்கு அந்தப் பகுதியிலே நிறைய திருட்டுகள் நடக்கின்றன. அங்கே தற்காலிகமாக இல்லாத நிலையில், நிரந்தரமாக சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்துகிற வகையில், மஹால் பகுதியில் கடைகள் அமைப்பதோடு, அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகள் சில மணி நேரங்கள் தங்கிச் செல்கின்ற அளவிற்கு ஓய்வு பெற்றுச் செல்கிற அளவிற்குதங்கும் விடுதிகளைக் கட்டி, திருட்டையும் ஒழிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. சுற்றுலாப் பயணிகளுடைய வசதியை மனதிலே கொண்டு, அங்கே இருக்கக்கூடிய கடைகளை நிரந்தரமான கடைகளாகக் கட்டுவதற்கும், தங்கும் விடுதி அமைப்பதற்கும், சுற்றுலாத் துறையின் மூலமாக ஏற்பாடு செய்யலாம். ஆனால் திருட்டுக்களைத் தடுப்பதற்கு காவல் துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9-40 மணி

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பால்ராஜ் அவர்கள் எழுப்பிய கேள்வியோடு என்னுடைய கேள்வியை இணைத்துக்கொள்ள வேண்டுகிறேன். மதுரை மாநகருக்கு வெளியிலிருந்து வரக் கூடியவர்கள் மீனாட்சியம்மன் கோவில் மேற்கு வாசல் வழியாகத்தான் உள்ளே நுழைய வேண்டும். அப்படி நுழைகின்ற அந்த நெடுஞ்சாலை 'டவுன் ஹால் ரோடு' என்று அழைக்கப்படுகின்றது. அந்த டவுன் ஹால் ரோடில் மிக முக்கியமான இடத்தில் சுமார் 300 ஆண்டு களாக தண்ணீர் இல்லாமல் ஒரு குளம் தூர்ந்து போயிருக்கிறது. அதை யாரோ ஒருவர் தடை வாங்கியிருக்கிறார் என்ற காரணத் திற்காக மதுரையினுடைய அழகை அழித்துவிடக் கூடாது என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத் திருக்கிறது அல்லது நீதிமன்றத்தின் மூலமாக ஒரு கமிஷன் அந்த இடத்தைப் போய்ப் பார்த்து அந்த குளத்தை எவ்வளவு அசுத்தப்படுத்துகிறார்கள் என்பதை எல்லாம் கவனித்து விரை விலே அதற்கு நல்ல நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் நீதிமன்றத்திலே அவர்களும் அந்தக் கோவிலைச் சேர்ந்த ஆன்மீக நேயர்களும் அறநிலையத் துறையும் போய் வழக்காடிக் கொண்டு நேரத்தை வீணாக்கு வதைவிட அவர்களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.

அவர்களுக்கும் ஏற்புடைய ஒரு திட்டத்தை உருவாக்கவிருக்கிறோம் நமக்கு அங்கே அங்காடிகள் வேண்டும், அந்தக் குளம் சுத்தமாக இருக்க வேண்டும், அதுதான் நம்முடைய நோக்கம். அவர்களுக்கு அங்கே மையத்திலே இருக்கக் கூடிய மண்டபம் வேண்டும். மண்டபத்தைச் சுற்றி சிறிய குளம். வேண்டும். அந்தக் குளத்தைச் சுற்றி ஒரு நந்தவனமும் உருவாக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். இவைகளை எல்லாம் சேர்த்து ஒரு 'Integrated Scheme' என்ற அளவிலே அந்தக் கோவிலினுடைய பக்தர்களுடைய அனுமதியைப் பெற்று விரைவிலே அந்தத் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் யோசனைப்படி ஒன்று தெப்பக் குளத்தின் மீது இருக்கின்ற தடையை நீக்கவேண்டும், அல்லது பக்தர்கள் சொல்வதைப் போன்று தெப்பக் குளத்தைப் புனிதப்படுத்த வேண்டுமென்றால் தெப்பக் குளக்கரையிலே இருக்கின்ற அந்தக் கடைகளை காலி செய்யவேண்டும். அங்கே ஒரு சாதாரண ரிக்ஷா கூடப் போகமுடியாத அளவிற்கு நெருக்கடியாக இருப்பதால், ஏராளமான லாட்ஜுகளில் இருப்பவர்கள் அவதிப்படுகிறார்கள். அதையாவது அமைச்சரவாகள் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, யார் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்களோ, அவர்களோடு ஒரு சமரச முடிவு ஏற்பட்டால் அவர்களே அந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வார்கள், திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். ஆகவே அதைப்பற்றி அதிகமாக நாம் அக்கறைப்படத் தேவையில்லை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொல்வதைப்போல் அந்தக் குளத்தைச் சுற்றி சாலைகளிலே கடைகள் இருக்கின்றன. நெருக்கடியான இடம். அவைகளை நானே பார்த்திருக்கிறேன். அந்தக் குறைகளைப் போக்குவதற்கு அந்தக் குளக் கரையிலே கட்டிடங்கள் கட்டி, கடைகள் கட்டி, அந்தக் கடைகளை சாலையோரங்களில் இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கான திட்டம் இருக்கிறது.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரைப்போல் திருச்சியிலும் (குறுக்கீடு) ஒட்டிய கேள்வி தான். அவரிடம் பதில் இருக்கிறது. மலைக் கோட்டையை ஒட்டிய தெப்பக் குளத்தைச் சுற்றி இதுபோன்ற கடைகள் கட்டி தெப்பக் குளத்தையொட்டி கடைகள் கட்டுவதன் மூலம் அங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றவர்களை அகற்றி மலைக் கோட்டை தேவஸ்தானத்திற்கு

வருவாயைப் பெருக்குகின்ற செயற் குறிப்பு அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது, அது குறித்து என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உள்ள பிரச்சினைக்கும், திருச்சியிலே உள்ள பிரச்சினைக்கும் சற்று வேறுபாடு உள்ளது. மதுரையிலே குளத்திலே தண்ணீரே இல்லை. ஆனால் திருச்சியிலே உள்ள குளத்திலே அதிகமான தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. தெப்பத் திருவிழா அங்கே நடத்த முடியும். ஆகவே அங்கே குளக் கரையில் குளத்திற்குள்ளே அங்காடிகள், கடைகள் கட்டுகின்ற பிரச்சினை எழவில்லை. இருந்தாலும் குளக் கரையில் அந்தக் கடைகளை வைப்பதால் இடைஞ்சலாக இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். அந்தக் கோவிலில் இருக்கக் கூடிய அறக்காவலர்கள் அண்ணா தி. மு. க. கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். அங்கே உள்ள நகராட்சியை அணுகி அந்தக் கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குதல்.

*2954 **திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தருமபுரி மாவட்டம், சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

9–45 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டம் சித்தேரி மலை வன வளத்தைப் பெருக்குவதற்குப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்தேரி என்பது 4,000 அடிக்கு மேலே இருக்கிற ஒரு உயரமான மலைப்பகுதி. 48 கிராமங்களைக் கொண்டிருக்கிற பகுதி. அந்தப் பகுதிகளிலே, வனத்துறை